

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 25-06-2025


# மகிழும் மாற்றுத் திறனாளிகள்

மாற்றுத்திறனாளிகள் அமைப்பினர் அனைவரும் சேர்ந்து மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மாபெரும் பாராட்டு விழாவை எடுத்திருக்கிறார்கள். அனைத்து அமைப்பினரும் இணைந்து நடத்திய விழா அது. பொதுவாக பாராட்டு விழாக்களில் கலந்து கொள்ளாத முதலமைச்சர் அவர்கள், இந்த நிகழ்ச்சியில் மனமுவந்து கலந்து கொண்டார்கள். ‘உங்களது அன்புக்காகத்தான் வந்தேன்’ என்று முதலமைச்சரும் விழாவில் குறிப்பிட்டார்கள்.

**பல்வேறு பழிச் சொற்களைக் குறிச்சொற்களாகக் கொண்டு அழைக்கப்பட்ட அந்தச் சகோதர, சகோதரிகளுக்கு ‘மாற்றுத் திறனாளி’ என்ற அடையாளச் சொல்லாக உருவாக்கி, அதனை அரசு ஆவணங்களில் இடம் பெறச் செய்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அந்த வழித்தடத்தில்தான் இன்றைய முதலமைச்சரும் செயல்பட்டு வருகிறார். கடந்த நான்கு ஆண்டு காலத்தில் மாற்றுத் திறனாளிகள் முன்னேற்றத்துக்காக மட்டும் 60 அரசாணைகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இதுதான் மகத்தான சாதனை ஆகும்.**

மாற்றுத் திறனாளிகளுக்கான கோரிக்கைகளை அவர்களே ஒலிக்க வேண்டும் என்பதற்காகத்தான் உள்ளாட்சி அமைப்புகளில் ஒரு மாற்றுத்திறனாளி உறுப்பினர் இடம் பெறுவார் என்ற மாபெரும் சமூக நீதி உரிமையை முதலமைச்சர் அவர்கள் வழங்கி இருக்கிறார்கள். 13 ஆயிரத்து 357 உள்ளாட்சி அமைப்புகளில் அதிகாரம் உள்ள உறுப்பினர்களாக அவர்கள் அமரப் போகிறார்கள். ஜூலை 1 முதல் இதற்கான பணிகள் தொடங்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு வரும் உறுப்பினருக்கு உள்ள உரிமைகள், சலுகைகள் அனைத்தும் இவர்களுக்கும் உண்டு.

**மாற்றுத்திறனாளிகள் பொருளாதார மேம்பாடு காண்பதற்காக அரசுத் துறைகளில் உகந்த பணியிடங்கள் கண்டறியப்பட்டு 4 விழுக்காடு இடஒதுக்கீடு முறையில் வாய்ப்புகள் வழங்க உத்தரவிட்டுள்ளார் முதலமைச்சர். இதே போல் தனியார் துறைகளிலும் பணியமர்த்த, மாவட்ட அளவிலும், மண்டல அளவிலும், சிறப்பு வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. சுமார் 624 மாற்றுத் திறனாளிகளுக்கு 163 தனியார் நிறுவனங்கள் வேலைவாய்ப்பு வழங்கியுள்ளன.**

மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக ஒவ்வொரு நிதியாண்டிலும் அதற்கான நிதி உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. 2021-2022-ஆம் நிதியாண்டில் ரூ.813.63 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 2025-2026ஆம் நிதியாண்டில் ரூ.1432.77 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பராமரிப்பு உதவித் தொகை வழங்கும் திட்டத்தின்கீழ் 2021ஆம் ஆண்டிலிருந்து காத்திருப்போர் பட்டியல் உட்பட அனைவருக்கும் உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

அரசு வளாகங்களில் மாற்றுத்திறனாளிகள் ஆவின் பாலகம் அமைக்கத் தேவையான வாடகை, முன் தொகை செலுத்துவதிலிருந்து விலக்கு அளித்து தகுதியான பயனாளிகளுக்கு பொதுப்பணித்துறை, வருவாய்த் துறை ஆகிய துறைகளுடன் ஆவின் நிறுவனம் இணைந்து ஆவின் பாலகம் அமைக்கும் திட்டம் செயல்பட்டு வருகிறது.

மாற்றுத்திறனாளிகளுக்கு சாலை ஓரங்களில் தள்ளுவண்டி கடை நடத்த நகர விற்பனைக் குழுவின் விதிமுறைப்படி முன்னுரிமை அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலும் மாவட்ட ஆட்சியர் கூட்டம் நடத்தும்போதும் முக்கிய நிகழ்வுகளின் போதும் செவித்திறன் பாதிக்கப்பட்டோர் பயன்பெறும் வகையில் சைகை மொழிபெயர்ப்பாளர் வசதி செய்யப்பட்டுள்ளது. மாற்றுத்திறனாளிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

மனநலம் பாதிக்கப்பட்டு குணமடைந்தவர்களை சமுதாயத்தில் ஒருங்கிணைக்கும் பொருட்டு “மீண்டும் இல்லம் (Home Again)” எனும் புதிய திட்டத்தினை முதற்கட்டமாக ஐந்து மாவட்டங்களில் அறிமுகப்படுத்தி, ஒரு மாவட்டத்திற்கு இரண்டு இல்லங்கள் வீதம் பத்து இல்லங்களில் 40 நபர்கள் பயன்பெறும் வகையில் ரூ.50.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. மாற்றுத்திறன் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் கல்வி உதவித் தொகையினை இருமடங்காக உயர்த்தி, 22,300 மாணவர்கள் பயன்பெறும் வகையில் ரூ.700.00 இலட்சம் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து மாவட்டங்களுக்கு நிதி வழங்கப்பட்டுள்ளது.

**அரசு போட்டித் தேர்வுகளில் கலந்துகொள்ள மாற்றுத் திறனாளிகளை ஊக்குவிக்கும் பொருட்டு, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மற்றும் ஏனைய அரசு தேர்வாணையங்களால் நடத்தப்படும் தேர்வுகளில் மாற்றுத்திறனாளிகள் அதிக எண்ணிக்கையில் வெற்றி பெற்று வேலைவாய்ப்பு பெறும் வகையில் ஆண்டுதோறும் 200 மாற்றுத் திறனாளிகளுக்கு உணவு மற்றும் தங்கும் விடுதி வசதியுடன் கூடிய சிறப்புப் பயிற்சி வகுப்புகள் முதற்கட்டமாக சென்னையில் குரூப் - II, II A தேர்வு எழுத உள்ளவர்களில் பயிற்சி வகுப்புக்கு பதிவு செய்த 49 மாற்றுத்திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை மூலம் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளது.**

ஒவ்வொரு ஆண்டும் மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக பல்வேறு புதுமையான முன்னெடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடந்த ஆண்டில் Centre for Excellence for the Persons with Autism Spectrum Disorder எனும் மையத்தினை துவக்கி புற உலக சிந்தனையற்றோரின் மறுவாழ்விற்காக ரூ.50 கோடி மதிப்பீட்டில் தகைசால் மையம் தீர்வு காணும் நடவடிக்கைகள் துவக்கப்பட்டுள்ளது.

**மாற்றுத்திறனாளிகளுக்கு அரசு மற்றும் பொதுக் கட்டிடங்களில் எளிதாக பயன்படுத்தக்கூடிய வகையில் தடையற்ற சூழல் அமைக்கும் பணிகளும் நடைபெற்று வருகின்றன. சாய்வுதளப்பாதை, மின்தூக்கி அமைத்தல், கழிவறை அமைத்தல், பார்வைத்திறன் குறையுடையோர் எளிதில் செல்வதற்காக தொடு உணர்வுடன் கூடிய தரைப்பகுதி (Tactile flooring), பிரெய்லி எழுத்துக்கள் கொண்ட தகவல் பலகை பொருத்துதல் உள்ளிட்ட நடவடிக்கைகள் பல்வேறு அரசு துறைகளின் கட்டிடங்களில் மேற்கொள்ளப்படுகின்றன.**

- இப்படி எண்ணற்ற திட்டங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தந்ததால்தான் மாற்றுத் திறனாளிகள் அமைப்பினர் அனைவரும் இணைந்து அவரை பாராட்டி இருக்கிறார்கள்.

**“எங்களைப் பார்த்துச் சிரித்தவர்கள் மத்தியில் எங்களைத் தலைநிமிரச் செய்துள்ளீர்கள். எங்களை அவமதித்தவர்கள் ஊரிலேயே எங்களுக்கு பிரதிநிதித்துவம் கொடுத்திருக்கிறீர்கள். எங்கள் வாழ்நாள் முழுக்க உங்களை மறக்க மாட்டோம்”** என்று டிசம்பர் 3 இயக்கத்தின் தலைவர் பேராசிரியர் தீபக் நாதன் உருக்கமாகச் சொன்னார். அதுதான் உண்மை.

மாற்றுத் திறனாளிகளுக்குச் செய்யப்பட்டது வழக்கமான திட்டங்கள் அல்ல. உரிமையை வழங்கும் சட்டங்கள் ஆகும். எனவேதான் ஒவ்வொரு உத்தரவும் உரிமை தரும் உத்தரவாக அமைந்துள்ளது. முதலமைச்சரை தாயும் தந்தையுமாகப் பார்க்கிறார்கள் மாற்றுத்திறனாளிகள்.

●●

# குரலற்றவர்களின் குரலாக ‘திராவிட மாடல்’ அரசு ஒலிக்கும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு அ.அன்புச்செல்வன் நெகிழ்ச்சிக் கடிதம்!

அன்புச் சகோதரர் தலைவர் - முதல்வர் ஸ்டாலின் அவர்களே,

இனிய வணக்கம்,

முத்தமிழறிஞர் கலைஞர் நிர்மாணித்த வள்ளுவர் கோட்டத்தை மீண்டும் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்ததற்கு வாழ்த்துகள்.

கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் பராமரிக்காமல், தமிழ்நாட்டினை சீரழித்தது போல வள்ளுவர் கோட்டத்தையும் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக தகுந்த பராமரிப்பு இன்றி சிதைந்து போகட்டும் என்று அன்றைய ஆட்சியினர் வாளாயிருந்தனர், அத்தகைய நிலையிலிருந்த **வள்ளுவர் கோட்டத்தை தங்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு, சீரிய முறையில் செயல்பட்டு புதுப்பித்து புதுப்பொலிவுடன் விளங்கும் வள்ளுவர் கோட்டத்தை மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தது தங்களுக்கு பெருமை சேர்க்கும் நிகழ்வாகும். முத்தமிழறிஞர் கலைஞரின் கனவுத் திட்டமான வள்ளுவர் கோட்டத்தை திறந்து வைத்தது மிகவும் சிறப்பானது.**

திராவிட மாடல் அரசின் திறமையாக நிர்வாகத்தை செம்மைப்படுத்தி, பல்துறைகளிலும் மிகுந்த முன்னேற்றம் கண்டுள்ளது. தமிழகத்தை முன்னேற்றியது போல வள்ளுவர் கோட்டத்தையும் எழிலார்ந்த வகையில் சீர்படுத்தியுள்ளது.

திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை மலர் கிடைத்தது. அதனைப் படித்துப் பார்த்து மலைத்தேன். கடந்த ஆட்சியினரின் திறனற்ற நிர்வாகத்தால் தாழ்ந்து கிடந்த தமிழகத்தை செம்மைப்படுத்தி, பல்துறைகளிலும் தமிழ்நாடு மிகுந்த முன்னேற்றம் கண்டுள்ளது.

திராவிட மாடல் அரசின் சாதனைகளை மிஞ்ச திராவிட மாடல் அரசின் வருடம் 2026-ல் அமையவிருக்கும் திராவிட மாடல் அரசின் 2.0-ல் தான் முடியும்.

இத்தகைய பல்துறை முன்னேற்றத்தில் ஆகச் சிறந்தது கல்வியிலும், சுகாதாரத் துறைகளிலும் திராவிட மாடல் அரசு கண்டுள்ள வளர்ச்சியாகும்.



**பள்ளிக்கல்வியிலும், உயர்கல்வியிலும் திராவிட மாடல் அரசு அடைந்துள்ள உயரங்கள் அனைத்துமே மெச்சத் தகுந்தவை, சமீபத்தில் வெளியான பல்வேறு புள்ளி விவரங்கள் கல்வி வளர்ச்சியில் தமிழகம் முதலிடம் பெற்றுள்ளதை சுட்டிக்காட்டுகிறது. திராவிட மாடல் அரசின் முன்னெடுப்புகளால் மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பழங்குடியின மாணவ, மாணவியர் பலப்பல கடுமையான போட்டித் தேர்வுகளில் தேர்ச்சி பெற்று நாட்டின் மிக உயர்ந்த ஐ.ஐ.டி. போன்ற கல்வி நிறுவனங்களில் தகுதியின் அடிப்படையில் இடம் பெற்றுள்ளனர் என்பதே திராவிட மாடல் ஆட்சியின் சாதனையாகும். அத்தகைய சாதனையாளர்களின் கல்விச் செலவை அரசாங்கமே ஏற்றுக் கொண்டுள்ளது, மற்றவர்களையும் சாதனை படைக்க ஊக்குவிக்கும்.**

இரண்டு தவணைகளில் 15 பல்வேறு சிறு நகரங்களில் கலை அறிவியல் கல்லூரி தொடங்கப்பட்டது கல்வியை மக்களுக் கருகே கொண்டு செல்லும் ஓர் முக்கிய முன்னெடுப்பாகும்.

**அரசாங்கப் பள்ளிகளிலும், அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளிலும் மாணவர்ச் சேர்க்கை மூன்று இலட்சத்தை தாண்டியுள்ளது என்ற செய்தியே கல்வியில் திராவிட மாடல் அரசு கண்ட மிகப் பெரிய வெற்றியாகும்.**

கல்வியைப் போன்று சுகாதாரத் துறையிலும் தமிழகம் பெரும் வளர்ச்சி கண்டுள்ளது. மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் 48 போன்ற திட்டங்கள் இந்தியாவின் ஏனைய மாநிலங்கள் மட்டுமல்ல; உலக சுகாதார அமைப்பின் பாராட்டையும் பெற்றுள்ளது. சமீபத்தில் நாளிதழ்களில் வெளியான இரண்டு முக்கிய செய்திகள் இத்துறையின் சாதனைகளுக்கு சான்றாக விளங்குகிறது.



முதலாவது சென்னை கலைஞர் நகரில் அமைந்துள்ள மருத்துவ புனர்வாழ்வு மையத்தில் மன வளர்ச்சி குன்றிய குழந்தைகள் குறிப்பாக ஆட்டிஸம் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு சிறப்பு பயிற்சி மையமும், உயர் ஆராய்ச்சி மையமும் அமைக்கப்பட்டுள்ளது ஓர் உயரிய செயலாகும். மையம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து ஆட்டிஸம் பாதிக்கப்பட்டுள்ள சுமார் 50க்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கும் அவர்களது பெற்றோர்களுக்கும் இத்தகைய குழந்தைகளை எப்படி கையாள்வது என்ற பயிற்சிகள் வழங்கப்படும் என்று அறிகிறோம்.

மேற்கூறியதைப் போலவே பெண்களுக்கு மார்பக புற்று நோய்க்கு இணையாக Cervical cancer என்ற நோயால் பெருமளவில் பாதிப்புக்கு உள்ளாகின்றனர், அதனைத் தவிர்க்க பதினான்கு வயது பெண் குழந்தைகளுக்கு தடுப்பூசி போடப்பட வேண்டும் என்று உலக சுகாதார நிறுவனம் அறிவுறுத்தியுள்ளது, இத்தடுப்பூசி விலையும் மிக அதிகம், இதனை உணர்ந்த **திராவிட மாடல் அரசு நிதிநிலை அறிக்கையில், 14 வயது பெண் குழந்தைகளுக்கு இத்தடுப்பூசி இலவசமாக வழங்கப்படும் என்று அறிவித்தது. திராவிட மாடல் அரசு என்பது செயல்படும் அரசு என்பதை நிரூபிக்கும் விதமாக உலகளாவிய ஒப்பந்தங்கள் கோரப்பட்டு இத்தடுப்பூசியை தயாரிப்பாளர்களிடத்திலிருந்து பெற்று, முதற்கட்டமாக அரசுப் பள்ளிகளில் பயிலும் 14 வயதிற்குட்பட்ட பெண் குழந்தைகளுக்கு இலவசமாக தடுப்பூசி செலுத்தும் திட்டத்தை தமிழக அரசு அறிமுகப் படுத்தியுள்ளது. இத்திட்டத்தை பிற மாநிலங்களில் மட்டுமல்ல; வளர்ந்த நாடுகளில் கூடத் தொடங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. பெண்களுக்கானது இவ்வரசு என்று மகளிர் கொண்டாடுவது பொருத்தமானது.**

வள்ளுவர் கோட்டத்தில் ஒலித்த மாற்றுத்திறனாளிகளின் பிரதிநிதிகள் உங்களையும், திராவிட மாடல் அரசையும் போற்றி புகழ்ந்ததை கேட்ட பொழுது,

**குரலற்றவர்களின் குரலாக திராவிட மாடல் அரசு ஒலிக்கும் என்பதை தாங்கள் கூறக்கேட்டது எனது நினைவலைகளில் நிழலாடியது, அச்சொற்களுக்கு இது போன்ற திட்டங்களே சிறந்த உதாரணமாகும்.**

**வாழ்க, வெல்க தங்களின் தமிழர் தொண்டு!!**

**மேன்மேலும் உங்கள் புகழ் ஓங்குக!!!**

**அன்புடன்,**

**அ. அன்புச்செல்வன்**

22.06.2025

### சென்னை ஜி.என்.செட்டி தெருவில் அமைந்திருக்கும்

# கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் சிலை கலைவாணர் அரங்க வளாகத்தில் நிறுவப்படும்!

## குடும்பத்தினரின் கோரிக்கையை ஏற்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, ஜூன் 25 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் அவர்களின் குடும்பத்தினரின் கோரிக்கையினை ஏற்று சென்னை, ஜி.என்.செட்டி தெருவில் அமைந்திருந்த கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் அவர்களின் திருவுருவச்சிலை சென்னை, வாலாஜா சாலையில் உள்ள கலைவாணர் அரங்க வளாகத்தில் நிறுவப்படும் என அறிவித்துள்ளார்.**

கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் நாகர்கோவில் அருகே ஒழுகினசேரியில் 29.11.1908 அன்று சுடலைமுத்துப்பிள்ளை, இசக்கி அம்மாள் தம்பதியருக்கு மகனாக பிறந்தார். நாகர்கோயில் சுடலைமுத்துப் பிள்ளை கிருஷ்ணன் என்பதன் சுருக்கமே என்.எஸ்.கிருஷ்ணன் என்பதாகும்.

கலையுலக மாமேதை கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் தமிழ்த் திரையுலகத்தின் புகழ்பெற்ற நடிகர் ஆவார். நடிகர், பாடகர், இயக்குநர் மற்றும் தயாரிப்பாளர் எனப் பன்முக ஆற்றலைப் பெற்றவர்.

அறிவியல் கருத்துகள் நாட்டில் பரவ வேண்டும் என்பதில் ஆர்வம் கொண்டவர். ஏறத்தாழ 150 படங்களுக்கு மேல் நடித்துள்ள அவர் சீர்திருத்தக் கருத்துகளைத் திரைப்படங்களில் துணிவோடு எடுத்துக் கூறியவர்.

கலையுலகில் கருத்துகளை வழங்கியது போல் தமது வாழ்க்கையிலும் ஆயிரக் கணக்கானவர்களுக்குப் பணத்தை வாரி வழங்கியவர். காந்தியடிகளிடமும், காந்திய வழிகளிலும் பற்று மிகக் கொண்டவர்.

தமிழ்த் திரைப்பட நகைச்சுவை நடிகரும் பாடகருமான கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் 1957 ஆகஸ்ட் 30 அன்று தனது 49வது வயதில் மறைவெய்தினார்.

### பேரறிஞர் அண்ணா திறந்து வைத்த சிலை!

அன்னாருக்கு தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்களால் 14.1.1969 ஆம் ஆண்டு சென்னை ஜி.என்.செட்டி தெரு, திருமலைப்பிள்ளை சாலை சந்திப்பில் திருவுருவச்சிலை திறந்து வைக்கப்பட்டது.

கடந்த 2008 ஆம் ஆண்டு அச்சாலை சந்திப்பில் உயர்மட்டப் பாலம் கட்டிய போது அவரது சிலை சந்திப்பின் ஒரு பகுதியில் தற்காலிகமாக நிறுவப்பட்டது.

தற்போது, கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்களின் குடும்பத்தார், அவரது திருவுருவச்சிலையை அவ்விடத்திலிருந்து அகற்றி சென்னை வாலாஜா சாலையில் உள்ள கலைவாணர் அரங்க வளாகத்தில் நிறுவ வேண்டும் எனக் கோரிக்கை வைத்துள்ளார்கள்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாடு அரசு சார்பில் அக்கோரிக்கையினை ஏற்று, கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்களின் திருவுருவச்சிலை தற்போது இருக்கும் இடத்திலிருந்து பாதுகாப்பாக அகற்றி சென்னை, வாலாஜா சாலையில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கலைவாணர் அரங்க வளாகத்தில் விரைவில் நிறுவப்படும் என அறிவித்துள்ளார்கள்.